## தமிழ்நாடு அனைவருக்கும் கல்வி இயக்கம்

"அனைவரும் கற்போம்" "அனைவரும் உயர்வோம்"

அனுப்புநர்

மாநிலத் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.

மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்
அனைத்து மாவட்டங்கள்.

ந. க. எண்.1115/அ5/பகுதிநேரப் பயிற்றுநர்/அகஇ/ 2011 நாள்:12.03.2012

பொருள் அனைவருக்கும் கல்வி இயக்கம் – பகுதி நேரப் பயிற்றுநர்கள் நியமனம் – அறிவுரை வழங்கல் – குறித்து

பார்வை 11.11.2011 நாளிட்ட பள்ளிக் கல்வி (சி2) துறையின் அரசாணை (பல்வகை) எண்.177.

* * * * *

பார்வையில் காணும் அரசாணைப்படி பணியமர்த்தப்பட்டுள்ள பகுதி நேரச் சிறப்பு ஆசிரியர்களுக்கென அரசாணையில் கூறப்பட்டுள்ள பணிகளை மட்டுமே தலைமை ஆசிரியர்கள் பகுதிநேர ஆசிரியர்களைச் செய்யச் சொல்லி அறிவுறுத்த வேண்டும். பகுதி நேர ஆசிரியர்களைப் பிற பாடங்கள் எடுக்குமாறு தலைமை ஆசிரியர்கள் நிர்ப்பந்திக்கக் கூடாது. எந்த பாடத்திற்காக பகுதி நேர ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனரோ அந்தப் பணிகளை மட்டும் அவர்களைச் செய்ய அறிவுறுத்த வேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளை பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இது போன்ற புகார்கள் ஏதும் வராவண்ணம் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மாநிலத் திட்ட இயக்குநருக்காக